வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

**தேதி 20.04.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் செவ்வாய்கிழமை அரசு முறை பயணமாக ஜெட்டா செல்கிறார்.

இந்தியாவின் படைப்பாற்றல் பொருளாதாரம் மிகப் பெரிய வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கிறிஸ்துவர்களால் கொண்டாடப் படுகிறது

அக்னிபாத் திட்டத்தின் கீழ் இளைஞர்கள் விண்ணப்பிக்க ஏப்ரல் 25 ஆம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ளது.

*பிரதமர் சவுதி* (14)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் செவ்வாய்கிழமை 2 நாள் அரசு முறை பயணமாக சவுதி அரேபியாவின் வணிக மையமான ஜெட்டாவிற்கு செல்கிறார். இந்த பயணத்தின் போது, பாதுகாப்பு கூட்டாண்மை, எரிசக்தி ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பான பல்வேறு பிரச்சனைகள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு. முகமது பின் சல்மானுடன் ஆலோசனை மேற்கொள்கிறார். மேலும், எரிசக்தி பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, பிராந்திய சிரத்தன்மை உள்ளிட்டவை குறித்த பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர் பார்க்கப்படுவதாக அந்நாட்டுக்கான இந்திய தூதர் சுஹேல் அஜாஸ் கான் கூறியுள்ளார். சவுதி அரேபியாவில் 2.7 மில்லியன் இந்தியர்கள் வசித்து வருவதாகவும், அந்நாட்டின் வளர்ச்சிக்கும், இந்தியாவுடனான நட்புறவுக்கும் இவர்களின் பங்கு இன்றியமையாதது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 40 ஆண்டுகளில் ஜெட்டாவிற்கு செல்லும் முதல் இந்திய பிரதமர் திரு மோடி என்பது குறிப்பிடத் தக்கது.

குடிமைப்பணிகள் தினம் (6)

17 ஆவது குடிமைப் பணிகள் தினம் நாளை கொண்டாடப்படுகிறது. இதை ஒட்டி, புதுடெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெறும் நிகழ்ச்சியில், குடிமைப் பணி அதிகாரிகளிடையே பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றுகிறார். பொது நிர்வாகத்தில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய அதிகாரிகளுக்கு அவர் விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார். இந்த ஆண்டு, 15 விருதுகள் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

*நிர்மலா* (11)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அரசு முறை பயணமாக அமெரிக்கா மற்றும் பெரு நாடுகளுக்கு செல்கிறார். அமெரிக்காவின் ஸ்டாண்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும் அவர், அந்நாட்டின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார். பின்னர் சான்பிரான்சிஸ்கோவில் வசிக்கும் இந்திய வம்சாவழியினரிடையே கலந்துரையாடும் திருமதி நிர்மலா, சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆலோசனை கூட்டங்களிலும் பங்கேற்கிறார். பின்னர் வரும் 26 ஆம் தேதி பெரு விற்கு செல்லும் நிதியமைச்சர், இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

*மன் கீ பாத்* (7)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 121 ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 27 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 1178 00 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ, அல்லது 1922 என்ற எண்ணில் குறுஞ்செய்தியாகவோ வரும் 25 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம்.

*அஸ்வினி வைஷ்ணவ்* (11)

இந்தியாவின் படைப்பாற்றல் பொருளாதாரம் மிகப் பெரிய வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மும்பையில் வரும் 1 ஆம் தேதி தொடங்கும் வேவ்ஸ் உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய ஊடகப் பொழுதுபோக்கு சூழலில் புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்றுக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்த மாநாட்டில் பங்கேற்க 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருப்பதன் மூலம் இந்தியாவில் படைப்பாற்றல் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி அடையும் என்றும், ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்துறையினருக்கு வேவ்ஸ் மாநாடு ஒரு சர்வதேச வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் கூறினார்.

தேவேந்திர பட்னாவிஸ் (9)

ஊரக பகுதிகளில் வசிக்கும் கடைக் கோடி மக்களுக்கும் தரமான சுகாதார சேவை அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று மகராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னாவிஸ் தெரிவித்துள்ளார். மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எளிதாகவும், தரமாகவும், குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவை கிடைப்பது முக்கியம் என்று கூறினார். மகாராஷ்டிராவில் கடந்த 2 ஆண்டுகளில் 10 புதிய மருத்துவ கல்லூரிகள் தொடங்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் எண்டோஸ்கோப்பி பிரிவில் சிறப்பாக செயல்பட்ட மருத்துவர்களுக்கு அவர் விருதுகளை வழங்கி பாராட்டினார்.

*ரிசர்வ் வங்கி ஆளுநர்* (10)

கடந்த 4 ஆண்டுகளில் இந்தியாவின் அந்நிய செலாவணி பணசந்தைகள் இரட்டிப்பாகி உள்ளதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா கூறியுள்ளார். இன்று பாலியில் நடைபெற்ற 24 ஆவது ஆண்டு நிலையான வருவாய் பணசந்தை மாநாட்டில் உரையாற்றிய அவர், 2020 ஆம் ஆண்டில் 32 பில்லியன் டாலராக இருந்த அந்நிய செலாவணி சந்தை, 2024 ஆம் ஆண்டில் 60 பில்லியன் டாலராக அதிகரித்து உள்ளதாக கூறினார். மேலும், தினசரி பண பரிவர்த்தனைகள் 3 கோடி ரூபாயில் இருந்து, 5 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவை எட்டி உள்ளதாக கூறிய அவர், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிதி நிர்வாக சீர்திருத்தங்களால் இது சாத்தியமானதாக தெரிவித்தார்.

*ஈஸ்டர்* (5)

ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கிறிஸ்துவர்களால் கொண்டாடப் படுகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். ஈஸ்டர் பண்டிகை குறித்த செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

# ஈஸ்டர் வாய்ஸ் (10)

புனித வெள்ளியன்று கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறிக்கும் விதமாக ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஈஸ்டருக்கு முந்தைய 40 நாட்கள் கிறிஸ்துவர்களின் தவக் காலமாகவும், ஈஸ்டருக்கு முந்தைய வாரம் பெரிய வாரமாகவும் கடைபிடிக்கப் படுகிறது. புதுச்சேரியில் உள்ள தூய ஜென்மராகினி மாதா தேவாலயம், தூய இருதய ஆண்டவர் பசிலிக்கா, நெல்லித்தோப்பு விண்ணேற்பு மாதா ஆலயம், வில்லியனூர் லூர்து மாதா ஆலயம் உள்ளிட்ட பல்வேறு தேவாலயங்களிலும் நள்ளிரவில் சிறப்பு திருப்பலி, மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான கிறிஸ்துவர்கள் கலந்து கொண்டு பிராத்தனையில் ஈடுபட்டனர்.

*அமெரிக்க துணை அதிபர் (4)*

அமெரிக்க துணை அதிபர் திரு ஜே டி வான்ஸ் 4 நாள் அரசு முறை பயணமாக நாளை காலை புதுடெல்லி வருகிறார். அவருடன் உயர்மட்ட குழு ஒன்றும் இந்தியா வர உள்ளது. நாளை மாலை பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்திக்க உள்ளனர்.

கட்டிட விபத்து (12)

புதுடெல்லி முஸ்தபா பாத் பகுதியில் 4 மாடி கட்டிடம் நேற்று இடிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கிய 5 பேர் மீட்கப்பட்டனர். மேலும் பலர் இடிபாடுகளுக்கு இடையே சிக்கி உள்ளனர். தொடர்ந்து 2 ஆவது நாளாக தேசிய பேரிடர் மீட்பு படையினர், காவல் துறையினர், தீயணைப்பு துறையினர் உள்ளிட்டோர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர். விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், காயமடைந்தோருக்கு 50 ஆயிரம் ரூபாயும் பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

*அமர்நாத்* (6)

ஜம்மு-காஷ்மீரில் நடப்பாண்டு அமர்நாத் யாத்திரையின் சேவை வழங்குவோருக்கான பதிவு நடைமுறையை தொழிலாளர் நலத்துறை தொடங்கி உள்ளது. இதற்காக ஜம்முவில் உள்ள உதவி தொழிலாளர் ஆணைய அலுவலகத்தில் உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை சரிபார்த்த பிறகு கட்டணம் இல்லாமல் பதிவு செய்யப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

*பாஜக* (5)

வக்பு சட்ட திருத்த மசோதா குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பாஜக சார்பில் நாடு தழுவிய பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று தொடங்கி வரும் மே மாதம் 5 ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த பிரச்சாரத்தில், பாஜக தலைவர்கள், தொண்டர்கள், உள்ளிட்டோர் இச்சட்ட திருத்தம் பற்றிய விழிப்புணர்வை இஸ்லாமியர்கள் இடையே ஏற்படுத்த உள்ளனர்.

*அக்னி வீர்* (10)

அக்னிபாத் திட்டத்தின் பல்வேறு பணியிடத்திற்க்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்த கூடுதல் விபரங்கள் .....

வாய்ஸ்

*அக்னி வீரர் வாய்ஸ் (10)*

அக்னிபாத் திட்டத்தின் கீழ் இந்திய ராணுவத்தில் பொதுப்பணி, தொழில்நுட்ப பணி, எழுத்தர், பண்டக காப்பாளர் உள்ளிட்ட பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க ஏப்ரல் 25 ஆம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ளது. இது முன்னர் ஏப்ரல் 10 ஆம் தேதியாக இருந்தது. புதுச்சேரியை சேர்ந்த தகுதியான இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் நாளை மறுநாள் காலை 10 மணிக்கு தாகூர் அரசு கலைக்கல்லூரியில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொள்ளலாம் என்று புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் விபரங்களை www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றும் இந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

*பல்கலைக்கழகம் அம்பேத்கர் (7)*

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி, மை பாரத் முன் முயற்சியின் கீழ், புதுச்சேரி பல்கலைக் கழத்தின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் 134 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப் பட்டது. இந்த சிறப்பு நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ்பாபு தலைமை விருந்திகராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். இவ்விழாவில், 50 க்கும் மேற்பட்ட என்எஸ்எஸ் தன்னார்வலர்கள் பங்கேற்றனர்.

விளையாட்டு (14)

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை வான்கடே மைதானத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில், சென்னை -மும்பை அணிகள் களம் காண்கின்றன.

ஆசிய இளையோர் குத்து சண்டை போட்டியின் முதல் சுற்றில், இந்தியாவின் ஹர்திக் தஹியா, ருத்ராக்ஷ் சிங் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். ஜோடானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் 15 வயதிற்கு உட்பட்டோருக்கான 43 கிலோ எடை பிரிவில் ஹர்திக் தஹியா, கஜகஸ்தானின் போலுசோ-வை வென்றார். 46 கிலோ எடை பிரிவில் ருத்ராக்ஷ் சிங், மங்கோலியாவின் இப்ராகிம் மாரலை வென்றார்.

மகராஷ்டிரா ஓபன் கிரண்ட் மாஸ்டர் செஸ் சாம்பியன் பட்ட போட்டிகள் புனேயில் நாளை தொடங்குகின்றன. வரும் 28 ஆம் தேதி வரை நடைபெறும இப்போட்டியில், அமெரிக்கா, இந்தோனேஷியா, ஸ்லோவாக்கியா, பெலாரஸ், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 13 நாடுகளின் முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

*நிலச்சரிவு* (3)

ஜம்மு காஷ்மீரின் ரம்பன் மாவட்டத்தில் பெய்த கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதில், 3 பேர் உயிரிழந்தனர். இடிபாடுகளில் சிக்கிய நூற்றுக்கும் மேற்பட்டோர் மீட்கப் பட்டுள்ளனர்.